**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.480/2024**

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 22ம் தேதியன்று அரச சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.S.இராமச்சந்திரன், B.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - பேபி | **PW-1** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - ரமேஷ் | | தொழில் | - |
| கிராமம் | - | | சமயம் | - |
| தாலுக்கா | - | | வயது | - **44** |

**(எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை:-**

நான் அரச்சலூர் மேற்கு தலவுமலையில் குடியிருந்து வீட்டில் இருந்து வருகிறேன். சாலை விபத்தில் காயமடைந்து இறந்து போன ரமேஷ் எனது கணவர். வழக்கு சம்பவ சமயத்தில் என் கணவர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக வேலை செய்து வந்தார். அவர் ஹீரோ ஹோண்டா இருசக்கர வாகனத்தை வைத்திருந்தார். மேற்படி வாகனத்தின் பதிவு எண் டி என் 36 எல் 0437. 10.10.2020 அன்று வழக்கம் போல் தனது இருசக்கர வாகனத்தில் அதிகாலை 3:30 மணிக்கு வேலைக்கு கிளம்பினார். மறுநாள் அதிகாலை ஒரு மணி அளவில் என் கணவருடன் வேலை செய்து வரும் உமாபதி என்பவர் எனக்கு போன் செய்து கஸ்பாபேட்டை அருகே வாய்க்கால் மேடு பகுதியில் ஒரு கார் ஒன்று என் கணவரின் இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும் என் கணவரை ஈரோடு அரசு மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும் என் கணவர் இறந்து விட்டதாகவும் எனக்கு தகவல் சொன்னார். நான் எனது உறவினர்களுடன் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்றேன். மேற்படி அரசு மருத்துவமனைக்கு விபத்து நடந்த சாலை வழியாகத்தான் நாங்கள் சென்றோம். விபத்தை ஏற்படுத்திக் கார் விபத்து நடந்த இடத்தில் கவிழ்ந்து கிடந்தது. அங்கு மின்சார கம்பம் சேதமடைந்து இருந்தது. எனது கணவர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனமும் சேதமடைந்து இருந்தது. நான் என் கணவரை ஈரோடு அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். அவருக்கு தலை பின்பகுதி இடது கால் ஆகிய இடங்களில்

காயம்பட்டு இறந்து கிடந்தார். விபத்து சம்பந்தமாக உமாபதியிடம் எவ்வாறு நடந்தது என்று கேட்டேன். மேற்படி உமாபதியும் எனது கணவரும் வேலையை முடித்துவிட்டு அவரவர்களின் இரு சக்கர வாகனத்தில் தனித்தனியாக வந்து கொண்டிருக்கும் பொழுது நடு இரவு 12 மணி அளவில் கஸ்பாபேட்டை வாய்க்கால் பகுதியாக அருகே வந்து கொண்டிருக்கும் பொழுது அரச்சலூரில் இருந்து ஈரோடு நோக்கி எதிரே வந்த வாகனம் வலது புறமாக ஏறி வந்து என் கணவர் ஒட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக சொன்னார். விபத்து ஏற்படுத்திவிட்டு இழுத்துச்சென்று கொண்டு கம்பத்தின் மீது மோதி கவிழ்ந்து விட்டதாக சொன்னார். விபத்து குறித்து ரங்கம்பாளையம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் தான் என்னால் கொடுக்கப்பட்டது. புகார் **அ.சா.ஆ.1.** காரை ஓட்டி விபத்து ஏற்படுத்திய நபரின் பெயர் ஜெயராஜ் என்று தெரிந்து கொண்டேன் விபத்து ஏற்படுத்திய காரின் பதிவு எண் எனக்கு நினைவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.480/2024**

2025 ம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.S.இராமச்சந்திரன், B.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - தமிழரசன் | **PW-2** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - சண்முகம் | | தொழில் | - |
| கிராமம் | - | | சமயம் | - |
| தாலுக்கா | - | | வயது | - 34 |

**(எதிரி ஆஜர் )**

**<u>முதல் விசாரணை:</u>-**

நான் அவல்பூந்துறை வேலங்காட்டுவலசில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு சொந்தமாக கஸ்பாபேட்டை வாய்க்கால் மேடு அருகே விவசாய நிலம் உள்ளது. 11.10.2020 அன்று நடு இரவு 11:30 முதல் 12 மணிக்குள் இருக்கும். நான் டிராக்டரில் என் வீட்டிற்கு சென்று கொண்டிருந்த சமயம் உமாபதி என்பவர் எனக்கு போனில் அழைத்து என் சித்தப்பா ரமேசிற்கு மேற்படி வாய்க்கால் மேடு அருகே வந்து கொண்டிருக்கும் பொழுது அவருக்கு எதிர் திசையில் வந்த கார் மோதி விபத்து ஏற்படுத்தியதாக தகவல் சொன்னார். சம்பவ இடத்தை நான் உடனடியாக சென்று பார்த்தேன். ரமேஷிற்கு இடது கால் உடைந்து விட்டது. தலையிலும் அடிபட்டு இருந்தது. வலது கை வலது காலிலும் காயம் ஏற்பட்டிருந்தது. விபத்து ஏற்படுத்திய கார் மின்கம்பியில் மோதி தலைகீழாக கவிழ்ந்து இருந்தது. ரமேஷ் பயணம் செய்த இருசக்கர வாகனம் விபத்தில் சேதம் அடைந்திருந்தது. ரமேஷ் அணிந்திருந்த ஹெல்மெட் உடைந்து இருந்தது. நான் விபத்தில் அடிபட்ட ரமேஷை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றேன். அவரை பரிசோதனை செய்த மருத்துவர் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக சொல்லிவிட்டார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது அனுமதி வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை;-</u>

போலீசார் என்னை விசாரித்த சமயத்தில் கடந்த 11.10.2020 அன்று அதிகாலை 12 மணிக்கு நான் எனது விவசாய பூமியில் தண்ணீர் திறந்து விட்டுக் கொண்டிருந்த சமயத்தில் வாய்க்கால் மேடு ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி TN 36 L 0437 இருசக்கர வாகனத்தில் ரோடின் இடதுபுறமாக வந்து கொண்டிருந்ததாகவும் அப்பொழுது ரோட்டின் எதிர் திசையில் எதிரி ஜெயராஜ் என்பவர் Tn 47 V 4164 என்ற காரை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வலது புறமாக ஏறி ஓட்டி வந்து ரமேஷ் ஓட்டிச் சென்ற இரு சக்கர வாகனத்தின் மீது மோதி சிறிது தூரம் இழுத்துச் சென்று மின்சார கம்பத்தின் மீது மோதி கார் கவிழ்ந்து விட்டது என்றும் சொல்லிவிட்டு தற்பொழுது எதிரி கேட்டுக் கொண்டதன் பெயரில் வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.480/2024**

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 22ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.S.இராமச்சந்திரன், B.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - கோபாலகிருஷ்ணன் **PW-3** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - பழனிச்சாமி | தொழில் | - |
| கிராமம் | - | சமயம் | - |
| தாலுக்கா | - | வயது | - 61 |

**(எதிரி ஆஜர் )**

**<u>முதல் விசாரணை:</u>-**

நான் அவல்பூந்துறை கண்டிக்காட்டு வலசில் குடியிருந்து கேபிள் ஆபரேட்டராக இருந்து வருகிறேன். தேதி மாதம் எனக்கு சரியாக நினைவில்லை சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு நாள் விடியற்காலை 5 மணியளவில் கஸ்பாபேட்டை தாண்டி வாய்க்கால் மேடு அருகே நான் வந்து கொண்டிருக்கும் பொழுது ஒரு சாலை விபத்து நடந்த பகுதியை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு வயல் அருகே கார் கவிழ்ந்து கிடந்தது. மின் கம்பம் உடைந்து இருந்தது. அப்பொழுது போலீசார் அங்கு இடத்தைப் பார்த்தார்கள். இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயாரித்தார்கள். அதில் நானும் மற்றொருவரும் கையெழுத்து செய்தோம். அவரது பெயர் எனக்கு தற்பொழுது நினைவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகஜர் **அ.சா.ஆ.**2 போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை.